8. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்) 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2005), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2005) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. இப்பொழுது பேசுகிறவர்கள் யார்? (குறுக்கீடுகள்) இடையிலே குறுக்கே புகுந்து கேட்டீர்களேயானால் எப்படி? காலையிலேயே கேட்டிருக்கலாம். இப்பொழுது இதில் பேசி முடியட்டும். (குறுக்கீடு) யார் பேசுபவர்கள் என்று இன்னும் list ஒன்றும் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) யார்? கணேசன், நீங்கள் பேசுகிறீர்களா? பாட்டாளி மக்கள் கட்சி, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவிலே! (குறுக்கீடு) இப்போது ஆரம்பித்து விடுவோம். பிறகு கேட்டுக்கொள்ளலாம். (குறுக்கீடு) கேளுங்கள், கேளுங்கள்.

9. வீட்டு வசதித் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது காலையில் அமைச்சர் தெரிவித்த கருத்துக்கு உறுப்பினர் விளக்கம்

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 1991–1996, அண்ணா தி.மு.க. ஆட்சியிலேதான் 1,000 கோடி ரூபாய் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடன்பெற்று, தேவையில்லாத ஏரிக் கரைகளிலெல்லாம் வீடுகள் கட்டி, விற்கப்படாமல் இருக்கின்றன. வேண்டுமானால், வெள்ளை அறிக்கை வைக்கட்டும். வீடுகள் கட்டி விற்கப்படாமல் இருக்கின்ற அந்த ஆட்சியினுடைய நிலையை வெள்ளை அறிக்கையாக வைக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். திராவிட

முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்டப்பட்ட அந்த வீடுகளெல்லாம் ரூ.78.5 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

8. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2005—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இதிலே, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவிலே யார் பேசுகிறார்கள்? (சிரிப்பு) யாருமே கையைத் தூக்க மாட்டேன் என்கிறார்களே? Bill-லே பேசுவது, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவிலே. (குறுக்கீடு) Appropriation Bill–லே. அங்கேயிருந்துதான் யார் என்பதே தெரியவில்லை.

திரு. துரைமுருகன்: நீங்கள் அந்த Appropriation Bill–ஐ அப்படிப் பண்ணிவிட்டீர்களே! இப்பொழுதுதான் Bill–ஐக் கொடுக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யார், கணேசன் பேசுகிறீர்களா? பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக. (குறுக்கீடுகள்) எஸ்.ஆர்.பி. பேசுகிறீர்களா? சரி.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மானியங்களுக்கான கோரிக்கைகள் இந்த மாமன்றத்தால் ஏற்கப்பட்டு, அதற்கான நிதியைப் பெறுவதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கும் நிதி ஒதுக்க மசோதாவை நிறைவேற்றும் நிலைக்கு வந்திருக்கிறோம். அமைச்சரவை கூடி எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் மானியக் கோரிக்கைகளை அவைமுன் வைப்பதற்கும், நிதி ஒதுக்க மசோதாவைத் தாக்கல் செய்வதற்கும் ஆளுநர் அனுமதி அளித்திருக்கிறார். எந்த ஒரு திட்டத்தையும் தனிப்பட்ட அமைச்சர் ஒருவர் அறிவித்தால் அது அரசமைப்புச் சட்ட விதிகளுக்குப் புறம்பானதாக அமைந்துவிடும். அந்நிலையில் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் விளக்கம் கேட்டு, நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் ஆளுநருக்கே வழங்கப்பட்டிருக்கிறது. நிதி அமைச்சர் தாக்கல் செய்த Budget–ல் புதிய வரிகள் எதுவும் இல்லையென்று தெரிவிக்கப்பட்டது. அதேபோன்று, இறுதிப் பற்றாக்குறை ரூ.260.41 கோடியாக மட்டுமே இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. பல்வேறு மானியங்களுக்கும் கோரியபடியே தொகைகளை வழங்குவதற்கும் இந்த மன்றம் தனது